**Tamilmanam International Research Journal of Tamil Studies**
தமிழ்மணம் சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்
ISSN 3049-0723 (Online) · ISSN 3107-7781 (Print)

Vol. 20, No. 01 (Oct 2026), pp. 283–288
tamilmanam.in

RESEARCH ARTICLE · OPEN ACCESS

# தென்மாவட்ட பழமொழிகளின் சிறப்புகள்

**முனைவர். பாக்கியமுத்து அ***

இணைப்பேராசிரியர் மற்றும் தமிழ்த்துறைத் தலைவர், திருவள்ளுவர் கல்லூரி, பாபநாசம், *India*

* Corresponding author / தொடர்பு ஆசிரியர்: முனைவர். பாக்கியமுத்து அ — packiamuthupackiamuthu@gmail.com

| Received / பெறப்பட்டது | Revised / திருத்தப்பட்டது | Accepted / ஏற்கப்பட்டது | Published / வெளியிடப்பட்டது |
|---|---|---|---|
| 1 October 2026 | — | 4 October 2026 | 1 October 2026 |
| **DOI** | — | **Article ID / கட்டுரை எண்** | TAJP-2026-00047 |

## Abstract / ஆய்வுச்சுருக்கம்

பழமொழிகளை உலகில் உள்ள அனைத்து சமுதாய மக்களும் பயன்படுத்துகின்றனர். பழமொழிகள் மூலம் அறக்கோட்பாடுகள் வலியுறுத்தப்படுகின்றன. தவறு செய்யும் போது அதனை எடுத்துரைக்கவும் பழமொழிகள் சிறந்த வாயில்களாக அமைகின்றன. அதுபோலவே குமரி மாவட்டக் கடலோர கிராம மக்கள் பேசும் பழமொழிகள் பிற இன மக்களிடம் இருந்து வேறுபட்டு காணப்படுகின்றது. வாய்மொழியாக பழமொழிப் பேசப்படும்போது சாதாரணப் பொருள்களையும் ஆழ்ந்து சிந்திக்கும்போது உட்பொருள்களையும் புரிந்துகொள்ளும் வகையில் இருக்கிறது. அவ்வகையில் எவற்றை மையமாகக் கொண்டு குமரி மாவட்ட மீனவர்கள் பழமொழிகளைப் பயன்படுத்துகின்றனர் என்பதை குறித்து ஆய்வதாக இக்கட்டுரை அமைகிறது.

**Keywords / திறவுச்சொற்கள்:** அனுபவம்- பழமொழி- உணர்வு-சிந்தனை-விலங்கு- பறவை- மரம்- அறிவுரை- இன்பம் -துன்பம்- பண்பாடு

**How to cite / மேற்கோள் காட்டும் முறை:** அ, மு. பா. (2026). தென்மாவட்ட பழமொழிகளின் சிறப்புகள். Tamilmanam International Research Journal of Tamil Studies, 20(01). https://tamilmanam.in/?post_type=tajp_article&p=8722

## முன்னுரை

எக்காலமும் அழிவில்லாமல் நாளுக்கு நாள் வளர்ந்து கொண்டிருப்பது பழமொழி. படிப்பறிவுள்ளவர்களுக்கும், படிப்பறிவில்லாத மக்களுக்கும் பொதுவான ஒன்று. ஆனால் இதனைப் பெரும்பாலும் பயன்படுத்துகின்றவர்கள் படிப்பறிவில்லாத மக்கள் தான். அவர்கள் தங்கள் அனுபவங்களையும் உணர்வுகளையும் பாடல்களாகவும், கதைகளாகவும் வெளிப்படுத்துகின்றனர். அந்தந்தச் சூழ்நிலைக்கு ஏற்ப அவை பல வடிவங்கள் பெற்றன. இதில் ஒரு வகைதான் பழமொழிகள். பழமொழிகள் நாட்டுப்புறக் கூறுகளில் ஒன்றாகும். இப்பழமொழிகள் நாட்டுக்கு நாடு, மாவட்டத்திற்கு மாவட்டம், கிராமத்திற்கு கிராமம் வளம் பெற்று இன்றளவும் வளர்ந்துக் கொண்டே இருக்கின்றன. கிராமங்களில் பொதுவாக பழமொழிகள் செவிவழிச் செய்தியாக, பேசப்பட்டு வருகின்றது. பாட்டி முதல் இன்றைய தலைமுறைகள் வரை பழமொழியை தங்கள் வாழ்க்கையில் ஒரு அங்கமாகக் கொண்டுள்ளனர் என்பது மறுக்க முடியாத உண்மை. வாய்மொழியாக பழமொழிப்

பேசப்படும்போது சாதாரணப் பொருள்களையும் ஆழ்ந்து சிந்திக்கும்போது உட்பொருள்களையும் புரிந்துகொள்ளும் வகையில் இருக்கிறது. அவ்வகையில் எவற்றை மையமாகக் கொண்டு குமரி மாவட்ட மீனவர்கள் பழமொழிகளை பயன்படுத்துகின்றனர் என்பதை குறித்து ஆய்வதாக இக்கட்டுரை அமைகிறது.

**விலங்கு பற்றிய பழமொழிகள்**

உலகில் உள்ள அனைத்துப் பொருட்கள் பற்றியும் பழமொழிகள் உள்ளன. பழமொழிகள் தொடராத பொருட்கே இல்லை எனலாம்.

ஒருவன் எவ்வளவு பெரிய திறமைசாலியாக இருந்தாலும் சில சமயங்களில் தவறுகள் வரலாம். இதற்குக் கூறுவதற்கு 'யானைக்கும் அடி சறுக்கும்' நமக்குத் தவறுகள் வருவது இயல்பான ஒன்று என்ற கருத்தை இப்பழமொழி வெளிப்படுத்துகிறது.

'நீந்தாத மாட்ட வெள்ளம் கொண்டு போவும்'

பெற்றோர் தங்கள் பிள்ளைகளிடம் ஏதேனும் ஒரு காரியத்தை செய்யக்கூடாது என அவர்களுக்கு அறிவரை கூறிய பின்பும் மீண்டும் மீண்டும் அவர்கள் அதே செயலை செய்யும் போது இப்பழமொழியை கூறுகின்றனர்.

'நாயைக் கண்டால் கல்லை காணோம்

கல்லக் கண்டா நாயைக் காணோம்'

நாம் விரும்புகிற எல்லாமே நமக்கு ஒரே நேரத்தில் கிடைத்து விடுவதில்லை. ஏதேனும் ஒன்று நமக்கு கிடைக்கும் போது மற்றொரு நம்மை விட்டுப் போய் விடுகிறது என்பதை கூறுவதாகவே இப்பழமொழி கூறுப்படுகிறது.

'கழுதைக்குத் தெரியுமா கற்பூர வாசனை'

'நல்லது நாய்க்குத் தெரியுமா'

இந்த இரண்டு பழமொழிகளும் ஒரே பொருளிலேயே வருகின்றன.

'சூடுப் பட்ட பூன அடுப்பண்டப் போவாது'

பூனையானது அடுப்பில் உள்ள சாம்பலில் தூங்கும் அப்படி தூங்கும்போது அதற்கு சூடுபட்டு விட்டது என்றால் மறுபடியும் அது அடுப்பின் பக்கம் போகாது. அதுபோலவே ஒருவர் ஏதேனும் ஒரு செயலைச் செய்து துன்பத்தை அனுபவித்து விட்டால் மீண்டும் அந்த செயலைச் செய்ய முன்வரமாட்டார்கள் என்றும் கருத்திலேயே பழமொழி கூறுப்படுகிறது.

'எலி வளவானாலும் தனி வள வேணும்'

நாம் வசிக்கக்கூடிய வீடு சிறிய வசதி குறைந்த வீடாக இருந்தாலும் தனியாக நமக்கு சொந்தமான வீடாக இருக்க வேண்டும். அப்போதுதான் நான் சுதந்திரமாக இருக்க முடியும் எனும் கருத்தில் இப்பழமொழி கூறுப்படுகிறது.

'நாயக் கழுவி நடுக்கடையில வச்சாலும் அது

கிடக்கிறது குப்பக் குழியில் தான்'

என்ற பழமொழியைக் கூறுகின்றனர்.

ஒருவர் ஏதேனும் ஒரு செயலைச் செய்து அதில் நல்ல வருமானத்தைக் கண்டு கொண்டால் பிறகு யார் என்ன சொன்னாலும் அச்செயலில் இருந்து பின்வாங்கமாட்டார் என்பதைக் கூற,

'சீனிக் கிழங்கு தின்ன பன்னி செவி அறுத்தாலும் நிக்காது'

என்ற பழமொழியைப் பயன்படுத்தினர். ஒரு குடும்பத்தின் தந்தை பெரிய புத்திசாலியாக இருந்து, அவரது பிள்ளைகளும புத்திசாலியாக இருந்துவிட்டால் 'புலிக்கு பிறந்தது பூனை ஆகாது' என்ற பழமொழியைக் கூறுகின்றனர்.

'பாம்புக்கு பால் வார்த்தது போல'

என்று பாம்பை அடிப்படையாக வைத்து பலவித பழமொழிகளைச் சொல்லி வைத்திருக்கிறார்கள். தேம்பித் திரியும் மனிதர்களும், சோம்பித் திரியும் மனிதர்களும் இந்த பாம்பு பழமொழிகளின் கருத்தை அறிந்து செயல்பட்டால் வான்புகழ் வாழ்க்கை அமையும் என்பதில் சந்தேகமில்லை என்கின்றனர்.

'அடியா மாடு பணியாது'

சிலர் எவ்வளவு தான் வாயால் புத்தி சொன்னாலும் கேட்கமாட்டார்கள், கம்பால் அடித்தால் மட்டுமே சொன்னதைச் செய்வார்கள். இது பொதுவாக சிறு குழந்தைகளுக்கு பொருந்தக் கூடியதாகும். எனவே மாட்டை மையப் பொருளாக வைத்து அடிவாங்காத மாடு கீழப்படியாது என்ற இப்பழமொழி கூறுகிறது.

ஒரு சிலர் எதற்கெடுத்தாலும் சண்டை, பிரச்சனை என அடுத்தவர்களைக் கேவலப்படுத்தும் செயல்களில் ஈடுபடுவார்கள். ஆனால் அவர்களுக்குப் போதிய பண வசதியோ பொருள் வசதிகளோ, எதுவும் இருக்காது. ஆனால் அடுத்தவர்களை கேவலப்படுத்துவதே அவர்கள் தொழிலாக இருக்கும். அவர்களை குறிப்பதற்காக,

'குதிரைக்கு கொம்பு 10 கொடுத்தா குத்தி கிழிச்சு போடும்'

என்ற பழமொழி பேசப்படுகிறது. குதிரைக்கு கொம்பு கிடையாது. அடுத்தவர்களை கேவலமாக பேசுகிறவர்களுக்கு பணமோ, காசோ கிடையாது வெறும் வாய் மட்டுமே உண்டு. அதுவும் கூட கிடைத்திருந்நால் யாரையும் மதிக்காமல் தூக்கிப் போட்டு மிதித்து இருப்பார்கள் என்பதை வெளிப்படுத்துகிறது இப்பழமொழி.

திரும்பத் திரும்ப பலமுறை நல்ல காரியங்களை எடுத்து சொல்லியும் கேட்காத மனிதர்களின் தன்மையைக் கூறுகிறபோது,

'நாய் வாலை நிமுக்க முடியுமா?'

என்ற பழமொழியைக் கூறுகின்றனர். நாய் வால் எப்பொழுதும் சுருண்டு தான் காணப்படும். யார் வந்து நிமிர்ந்து விட்டாலும் மீண்டும் தானாகவே சுருண்டு விடும் அதேபோல் தான் சில மனிதர்களின் தன்மையும் என்று கூறுப்படுகிறது.

கிராமங்களில் சில வேலைகளில் சண்டை ஏற்பட்டு அதுபெரும் விபரீதமாக வந்துவிடும். அப்பொழுது கிராம மக்களைச் சமாதானப்படுத்த ஒரு பெரிய மனிதனை ஏற்பாடு செய்வார்கள். அவர் போய் அமைதியாக அமர்ந்திருந்தால் அங்கே சண்டை ஓம்வதில்லை பிரச்சினை மீண்டும் வலுக்கும் இதனை,

'நாய் வேஷம் போட்டால் குரைக்கணும்'

என்ற பழமொழியைச் சொல்வார்கள். இரண்டு கிராம மக்களுக்கும் ஒரு தீர்ப்பைச் சொல்லி சமரசமாகப் பேசுவார் என்ற எண்ணத்தில் அழைத்து வரப்பட்ட மனிதர், நடுவர் என்ற பெயரை மட்டும் வைத்துக் கொண்டு அமைதியாக இருந்தால் சரி ஆகாது என்பதை நாய் போன்று வேடம் போட்டால் கண்டிப்பாகக் குரைத்து காட்ட வேண்டும் என்று கூறுகின்றனர்.

எவ்வளவு அதிகமாகச் செல்லம் இருந்தாலும் அதனைப் பார்த்து பார்த்து சிக்கனமாகச் செலவு செய்யக் கூடிய மனிதர்களைப் பற்றி கூறும்போது,

'நடுகடல்ல விட்டாலும் நாய் நக்கித்தான் குடிக்கும்'

என்ற பழமொழியைக் கூறுகின்றனர். கடலில் நிறைய நீர் இருக்கிறது என்பதற்காக நாய் சென்று ஆவேசப்பட்டு குடிக்காமல், கொஞ்சமாக நக்கி நக்கித் தான் குடிக்கும். அதுபோலவே தங்களுடம் எவ்வளவு செல்வம் இருந்தாலும் அதனை வாரி வாரி செலவு செய்யாமல் சிக்கனமாகச் செலவு செய்கிற மனிதர்களைக் குறிப்பதற்காகக் கூறப்படுகிறது இப்பழமொழி.

'ஆடு நனையதுன்னு ஓநாய் கரைஞ்சதாம்'

ஆடு நனைவதைப் பார்த்து ஓநாய் அழுவது வெறும் பாசாங்கு.

அதுபோல பலனை எதிர்பார்த்து ஒருவன் மேல் இரக்கப்படும் வேடதாரிகளிடம் எச்சரிக்கையாக இருக்க வேண்டும் என்பதை இப்பழமொழி விளக்குகிறது.

'ஆடு பகை குட்டி உறவா?'

இப்பழமொழியானது வீட்டில் பெரியவர்களுக்கு இடையே தீராத பகைக் காணப்படும். ஆனால் பழிவாங்கும் நோக்கத்தில் வீட்டில் உள்ள இளைய வயதினரிடம் நட்பாக இருப்பது போல் நடப்பார்கள். மேலும் பெரியவிடம் பகை பாராட்டி இளையோரிடம் உண்மையான அன்பு பாராட்டினால் அந்த சூழ்நிலையில் இந்த பழமொழியைப் பயன்படுத்துவர்.

பறவை பற்றிய பழமொழிகள்

பறவை பற்றிய பழமொழிகளும் இம்மக்களிடையே வழக்கில் உள்ளன.

'உயர உயர பறந்தாலும் ஊர் குருவி பருந்தாகுமா?'

என்பது ஒரு பழமொழி. மிகவும் ஏழ்மையாக இருந்த ஒருவன் தன் வாழ்வில் எவ்வளவு தான் முயற்சிகளை மேற்கொண்டு முன்னேறி மேலே சென்றாலும், சில சமயங்களில் தனது பழைய வாழ்க்கையின் குணாதிசயங்கள் அவனில் வெளிப்பட்டுவிடும். இதனால் தான் இப்பழமொழியைக் கூறுகின்றனர்.

மேலும் பெற்றோர் தங்கள் பிள்ளைகளைத் தண்டிப்பதனால் அவர்கள் நல்ல வழிகளில் நடப்பார்களோ தவிர அவர்களுக்கு எந்த தீமையும் ஏற்படாது என்ற கருத்தில் 'கோழி மிதிச்சு குஞ்சு சாகுமா?' என்று கூறுகின்றனர்.

ஒரு குழந்தை எப்படிப்பட்டதாக எத்தகையத் தன்மை உடையதாக இருந்தாலும் அக்குழந்தையின் தாய் குழந்தையைத் தனது பொக்கிஷமாகவே கருதுவாள். இதனை உணர்த்தவே 'காக்கைக்கும் தன் குஞ்சு பொன் குஞ்சு' என்ற பழமொழி கூறப்படுகிறது.

சிறு குழந்தைகளிடம் நாம் எதை பேசுகிறோமோ, அதையே அப்பிள்ளைகள் திருப்பிக் கூறும். நாம் நல்ல வார்த்தைகளை பேசினால் நன்றாக பேசும். கெட்ட வார்த்தைகளைப் பேசினால் அதுவம் அதையே திரும்பக் கூறும். இதையே தான் குழந்தைகளை கிளியுடன் ஒப்பிட்டு, 'சொன்னதைச் சொல்லுமாம் கிளிப்பிள்ளை' என்கின்றனர்.

ஒருவன் தான் செல்லமாக வளர்த்தக் கிளியைக் குரங்கிடம் கொடுத்தால் குரங்கு என்ன செய்யும்? அதனைக் கொண்டு தின்றுவிடும். அதுபோல அழகான தன்னுடைய மகளைத் தீய பழக்கங்கள் கொண்ட ஒரு ஆணுக்கு திருமணம் செய்து வைத்தால் அப்பெண்ணின் வாழ்க்கை வீணாகி விடும் என்பதை 'கிளியை வளர்த்து குரங்கு கையில் கொடுக்கலாமா' என்று கூறுவர்.

'கோழி கூவி நேரம் விடியுமா'

ஒரு வேளை நான்கு மணிக்கு கூவ வேண்டிய கோழி இரவு பன்னிரண்டு மணிக்கு கூட கூவலாம். உடனே நேரம் விடிந்து விடும் என்பது அர்த்தமல்ல நமக்கான நேரம் வரும்போது நடக்க வேண்டிய நல்லது நடக்கும் என்பது உணர்த்துகிறது இப்பழமொழி.

மரம் பற்றிய பழமொழிகள்

முருங்கை மரத்தை நன்றாக வளர விட்டால் அதில் ஏறி காய்களையும் இலைகளையும் பறிக்க முடியாது. எனவே முருங்கையை முறித்து தான் வளர்க்க வேண்டும். அப்பொழுது தான் அது கைக்கு எட்டக்கூடிய உயரத்தில் வளரும். அதுபோல குழந்தைகள் தவறு செய்யும் போது அவர்களைத் தண்டித்து வளர்த்தால் தான் பிறகாலத்தில் அவர்கள் தீய வழியில் செல்லாமல் நல்ல வழியில் நடப்பார்கள் என்பது கூறுவதற்காகவே,

'முருங்கய முறிச்சி வளர்க்கண்டும்

பிள்ளைய அடிச்சு வளர்க்கனும்'

எனச் சொல்லி வைத்தார்கள்.

'காய்ச்ச மரம் தான் கல்லடி படும்'

என்பது பழமொழி. ஒரு மரத்தில் காய்கள் அதிகமாக இருந்தால் அதில் கல்லடி படுவது நிச்சயம். அதுபோல ஒருவர் அனைவருக்கும் ஆதரவாக இருந்து, பலருக்கு உதவுகிறார் என்றால் அவருக்கு பல பிரச்சனைகள் வருவது இயல்பான ஒன்றாகும்.

நீர்வாழ் உயிரினம் பற்றிய பழமொழிகள்

மீனவர்களிடையே நீர் வாழ் உயிரினம் பற்றிய பழமொழிகளும் காணக் கிடைக்கின்றது.

'நண்டு கொழுத்தா வளையில கிடக்காது'

சிலர் கொஞ்சம் செல்வச் செழிப்பு ஏற்பட்ட உடனே பெருமை காட்டுவதையும், வறுமைநிலையில் உள்ளோர் உழைக்காமல் திடீரென கிடைக்கும் பணத்தினாலும் தன் நிலையிலிருந்து மாறுபடுவர் என்பதையும் இப்பழமொழி கூறுகிறது. அதோடு தொடர்புடையது. 'அர்ப்பனுக்கு வாழ்வு வந்தா அர்த்தராத்திரியில் குடைபிடிப்பான்' என்ற பழமொழி ஆகும்.

'கெண்டையை விட்டு விராலை பிடிப்பது போல'

ஆற்றில் மீன் பிடிப்பவர்கள் சிறிய மீனாகிய கெண்டையைத் தூண்டில் முள்ளில் இரையாக குத்தி விரால் போன்ற பெரிய மீனை பிடிப்பர். அதுபோல சில சிறியத் தொகையை முதலாகப் போட்டு பெருந்தொகையை லாபமாகப் பெறுவார்கள் என்பதே இப்பழமொழியின் கருத்தாகும்.

'தூண்டிலில் அகப்பட்ட மீன் போல'

தொகுப்புரை

பழமொழிகளை உலகில் உள்ள அனைத்து சமுதாய மக்களும் பயன்படுத்துகின்றனர். பழமொழிகள் மூலம் அறக்கோட்பாடுகள் வலியுறுத்தப்படுகின்றன. தவறு செய்யும் போது அதனை எடுத்துரைக்கவும் பழமொழிகள் சிறந்த வாயில்களாக அமைகின்றன. அதுபோலவே குமரி மாவட்டக் கடலோர கிராம மக்கள் பேசும் பழமொழிகள் பிற இன மக்களிடம் இருந்து வேறுபட்டு காணப்படுகின்றது.

ஒவ்வொரு இடங்களிலும் உள்ள பழமொழிகள் அந்தந்த இடங்களில் உள்ள

பண்பாட்டு சூழலைக் காட்டி நிற்கின்றன. அது போலவே குமரி மாவட்ட மீனவர்களின் வாய்மொழி வழக்காறுகளில் ஒரு வகையான பழமொழிகளின் பண்பாட்டு சூழலையும் அவர்களது நம்பிக்கைகள், பழக்கவழக்கங்கள் போன்றவற்றையும் அறிந்து கொள்ள முடிகிறது.

பறவைகள் மற்றும் விலங்குகளை உதாரணமாகக் கொண்டு மனிதனுக்கு பல அறிவுரைகள் இந்த பழமொழிகளின் மூலம் கூறப்படுகின்றன. மேலும் கடலில் மீன் பிடிக்கச் செல்லும் போது மீனவர்களின் வாழ்வில் ஏற்படும் கஷ;ட, நஷ;டங்கள், துன்பங்களை பழமொழிகளின் வாயிலாக அறியமுடிகிறது.

© 2026 முனைவர். பாக்கியமுத்து அ. This is an open-access article distributed under the terms of the CC BY 4.0 licence, which permits use, distribution and reproduction in any medium, provided the original work is properly cited. Published by / வெளியீடு: Department of Library, Nallamuthu Gounder Mahalingam College, Pollachi..